023

# SOUTH EASTERN UNIVERITY OF SRI LANKA
# SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
# HELD IN MAY - 2007

## TML 2.15– FOLK LITERATURE IN TAMIL

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. வாய்மொழி இலக்கியம் என்றால் என்ன?
வாய்மொழி இலக்கிய சேகரிப்பு, ஆய்வுகளின் முக்கியத்துவம் முதலானவற்றை விபரிக்குக.

02. வாய்மொழி இலக்கியங்களில் 'தாலாட்டுப் பாடல்'கள் தாய்மை உணர்வினை வெளிப்படுத்து-வதோடன்றி சமூக நோக்கினைக் கொண்டனவாகவும் அமைந்துள்ளன." இக்கூற்றினை எடுத்துக்காட்டுகளுடன் அலசுக.

03. காதல் பாடல்களில் 'சமூக சந்தர்ப்பம்' பெறும் முக்கியத்துவத்தினை, வாய்மொழி இலக்கிய ஆய்வாளர்களின் கருத்துக்களை எடுத்துக்கூறி விமர்சன ரீதியாக விபரிக்குக.

04. வாய்மொழி மரபில் எழுந்த, இயற்கை அனர்த்தங்களைக் குறிக்கும் நெடும்பாடல்கள் அல்லது காவியங்கள் குறித்து கருத்துரைக்குக.

05. மலையக மக்களின் வரலாறு, பண்பாடு முதலானவற்றை விளக்க, மலையக வாய்மொழிப் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன." இக்கூற்றினை போதிய எடுத்துக்காட்டுகளுடன் பரிசீலிக்குக.

06. தற்காலத்தில் வழங்கும் அரசியல் நிலைப்பட்ட வாய்மொழிப் பாடல்களை எடுத்துக்காட்டி அவற்றின் வடிவம், உள்ளடக்கம் குறித்து விமர்சன ரீதியாக கருத்துரைக்குக.

07. பழமொழி, விடுகதைகள் முதலானவை ஆக்க இலக்கியங்களிலும் மனித தொடர்பாடலிலும் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** குறித்து **விரிவாக** கருத்துரைக்குக.

(அ) ஒப்பாரிப் பாடல்கள்
(ஆ) வாய்மொழிக் கதைகள்
(இ) பேராசிரியர் தே. லூந்து
(ஈ) நா. வானமாமலை
(உ) கனிந்த காதல் - ஆ.மு. ஷரிபுதீன்

***